# நெடுஞ்சாலை திட்டங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக விருப்புக் கொடுப்பனவுத் தொகுதி

## 1. காணி

### 1.1 காணிகளுக்குப் பொருத்தமான மேலதிக விருப்புக் கொடுப்பனவுத் தொகுதி

*1.1.1 காணிகளுக்கான கொடுப்பனவு பிரதம மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட பிரதியீட்டுக் கிரய அடிப்படையில் அமையும். சட்ட ரீதியான நட்டஈட்டிற்கும், பிரதியீட்டுக் கிரயத்துக்கும் இடையிலான வித்தியாசம் மேலதிக விருப்புக் கொடுப்பனவாகும்.*

*1.1.2 சுவீகரிக்கப்பட்ட பின் எஞ்சியிருக்கும் பகுதி காணி (விவசாயம் செய்யும் காணி தவிர) தனியான கூறாக பாவனைக்கு உட்படுத்த முடியாததாயின் காணி சுவீகரிப்பு மீளாய்வுக் குழு (LARC) மிகுதிக் காணியை முழுமையாகக் கொள்வனவு செய்து சுவீகரிக்கவோ கொள்முதல் செய்யவோ தீர்மானிக்கலாம். அந்தக் காணியின் உரிமையாளர் போதுமான கொடுப்பனவுடன் தன்வசம் வைத்திருக்க விரும்பினால் காணி சுவீகரிப்பு மீளாய்வுக் குழு (LARC) ஒரு கொடுப்பனவை வழங்கத் தீர்மானிக்கலாம்.*

*1.1.3 விவசாயக் காணிகள் சம்பந்தமட்டில் மிகுதிக் காணி அதன் அளவு மட்டத்தில் பொருத்தமாக இல்லாதவிடத்து காணி சுவீகரிப்பு மீளாய்வுக் குழு (LARC) அதை சுவீகரிக்கவோ அல்லது அதற்குரிய கொடுப்பனவைச் செய்யவோ தீர்மானிக்கலாம்.*

*1.1.4 எல்லா மேலதிக விருப்புக் கொடுப்பனவுகளும் பிரதம மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்படும்.*

### 1.2 அரச காணிகளில் அத்துமீறல்

*வீதி அபிவிருத்தி அதிகாரசபை அவசியம் எனத் தீர்மானித்தால் அரச காணிகளில் அத்துமீறிக் குடியிருப்போர்கள் வேறு இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவர். எனினும் காணிக்கென கொடுப்பனவு எதுவும் செய்யப்படமாட்டாது. ஆனால் காணியில் ஏதாவது சீர்திருத்தம் செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும். இந்த ஏற்பாடு 2005.01.01 க்கு முன்னதாக அரச காணிகளில் அத்துமீறியவர்களுக்கு மட்டும் பொருந்தும்.*

### 1.3 தனிப்பட்ட காணிகளில் அத்துமீறல் செய்தவர்கள்

*தனிப்பட்ட காணிகளில் அத்துமீறிக் குடியிருப்பவர்கள் அது சம்பந்தமாக காணி உரிமையாளரினால் சட்டமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யாது இருந்தால் அக்காணிகளில் உள்ள திருத்தங்களுக்கு அவை சம்பந்தமாக போதிய அத்தாட்சிகள் வழங்கப்பட்டால் கொடுப்பனவு வழங்கப்படும்.*

## நெற் காணிகள் சுவீகரிப்பு

### 1.4.1 நெற் காணிகளுக்கான மேலதிக விருப்புக் கொடுப்பனவு

*நெற் காணிகள் அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்டால் பின்வரும் அடிப்படையில் மேலதிக விருப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.*

(அ) சட்ட ரீதியான நட்டஈடு மற்றும்

(ஆ) காணியை விருத்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அதிகாரம் பெறப்பட்டது எனக் கருதி பிரதம மதிப்பீட்டாளரினால் கணிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 10% மேற்கூறிய இரண்டுக்கும் இடையிலான வித்தியாசத் தொகை.

***நெற் காணி என்றால் :-*** சுவீகரிக்கப்பட்டதுக்கு முன் குறைந்தது 5 வருடங்களுக்கு நெல் விவசாயம் செய்யப்பட்ட அல்லது நெல் விவசாயத்துக்கு தயார் செய்யப்பட்ட அல்லது நெல் விவசாயத்திற்கு உபயோகிக்கப்பட்ட காணிகளாகும்.

### 1.5 வீதிக்கு ஒதுக்கப்பட்ட அல்லது கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு தடுக்கப்பட்ட எல்லைக்குள் வரும் காணிகள்

வீதிக்கு ஒதுக்கப்பட்ட அல்லது கட்டிட நிர்மாணத்துக்கு தவிர்க்கப்பட்ட எல்லைகளுக்குள் வரும் காணிகள் சம்பந்தமாக அவர்களில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் அல்லது அமைப்புக்கள் அவை குறிப்பிட்ட ஒதுக்கம் அமுல்படுத்தப்பட்ட திகதிக்கு பிந்தியதாக இருந்தால் நட்டஈடு அல்லது மேலதிக விருப்புக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

### 1.6 வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிமையான காணிகளில் அனுமதியின்றி குடியிருத்தல்

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய காணிகளில் அனுமதியற்ற குடியிருப்புக்கள் இருந்தால், அக்காணிகளில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் இருந்தால் நட்டஈடோ அல்லது மேலதிக கொடுப்பனவோ வழங்கப்படமாட்டாது.

## 2. <u>கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்</u>

கட்டிடங்களுக்கும் கட்டமைப்புக்களுக்கும் பிரதம மதிப்பீட்டாளரின் வரையறை அடிப்படையில் பிரதியீட்டுக் கிரயம் (தேய்மானம் தவிர) வழங்கப்படும்.

2.1 ***சிறிய குடிசைகள் :*** ஆகக் குறைந்த கொடுப்பனவு 300,000.00 ரூபா

2.2 ***கட்டமைப்புப் பகுதிகள் :*** கட்டமைப்புப் பகுதிகள் மட்டும் சுவீகரிக்கப்பட்டால் கொடுப்பனவுக்காக அந்த அமைப்பின் உருவ மைய மட்டத்தில் நில பரப்புக்கு கொடுப்பனவு வழங்கப்படும்.

2.3 **கட்டமைப்புக்களில் எஞ்சிய பகுதி :** கட்டமைப்பின் ஒரு பகுதி சுவீகரிப்பின் பின் எஞ்சிய பகுதி பாவனைக்கு பொருத்தமற்றதாகில் காணி சுவீகரிப்பு மீளாய்வுக் குழு (LARC) பொருத்தமான தீர்மானத்தை எடுக்கும்.

2.4 ***சமாதிகளும் சமமான அமைப்புக்களும் :*** அவையை அகற்றி மீளமைப்புச் செய்வதற்கு ரூபா 15,000.00 கொடுப்பனவு செய்யப்படும்.

2.5 ***சமய அமைப்புக்களும், பொது கட்டிடங்களும், பொது வசதிகளும் :*** வீதி அபிவிருத்தி அதிகாரசபை மீளமைப்புச் செய்தல் அல்லது அவ்வமைப்புக்கள் பொது வசதிகள் சம்பந்தமான பிரதியீட்டுக் கிரயத்தை வழங்குதல்.

## 3. <u>வாடகைச் சட்டத்தின் கீழ் வாடகைக் கட்டுப்பாட்டுக்குள்ளான ஆதனங்கள் – கடைகளும் வீடுகளும்</u>

மேற்கூறப்பட்டவைகளுக்கான கொடுப்பனவு பின்வரும் வழிமுறைக்கு அமைவாக பிரதியீட்டுக் கிரயம் வழங்கப்படும்.

| குடியிருப்பாளரின் குடியிருப்புக் காலம் | வீதம் | |
| --- | --- | --- |
| | குடியிருப்பாளர் | உரிமையாளர் |
| 20 வருடங்களுக்கு கூடியது | 75 | 25 |
| 10 – 20 வருடங்கள் | 50 | 50 |
| 05 – 10 வருடங்கள் | 25 | |
| 05 வருடங்களுக்கு குறைந்தது | 10 | 90 |

## 4. வியாபார நட்டங்கள்

வியாபாரங்கள் பின்வரும் வரையறைகளுக்கு அமைவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| 4.1 வியாபார வகை | உருத்து |
| --- | --- |
| 4.1.1 முறை சாராதவை (வருமான வரி செலுத்தாதவை) | ஆவணங்கள் மூலம் அத்தாட்சிப் படுத்தும் பட்சத்தில் ரூபா 15,000 அல்லது 6 மாத தேறிய வருமானம் எது கூடியதோ அது வழங்கப்படும். |
| 4.1.2 முறைசார் (வருமான வரி செலுத்துபவர்கள்) | வியாபாரம் முழுமையாக இழக்கப் பட்டால் குறைந்தது ரூபா 15,000 அல்லது சுவீகரிப்புக்கு முந்திய 3 வருடங்களுக்கான தேறிய சராசரி செம்மையாக்கப்பட்ட இலாபம். இதை வரிக்காக வெளிப்படுத்தல் ஆவணம் மூலம் அத்தாட்சிப்படுத்த வேண்டும். |

தற்காலிகமாக வியாபாரம் நிறுத்தப்பட்டால் கொடுப்பனவு தொகையை மதிப்பீட்டாளர் தீர்மானிப்பார்.

## 5. வாழ்க்கை வசதி இழப்பு

சுயதொழில் ஈடுபடுபவர்கள் வருமான இழப்பினால் தற்காலிகமாக பாதிக்கப்பட்டால் வாழ்க்கை வசதிக் கொடுப்பனவாக ரூபா 15,000 க்கு உரித்துடையவராவர்.

## 6. வடுபட்டவர்களுக்கான கொடுப்பனவு

வடுபட்ட குடும்பங்களுக்கு மேலதிக கொடுப்பனவாக ரூபா 15,000 வழங்கப்படும். வடுபட்ட குடும்பங்கள் என்றால் பெண்கள் தலைமையில் உள்ள குடும்பங்களும் ஊனமுற்றோர் அடங்கிய குடும்பங்களும் வயோதிபர்களும் அடங்கிய குடும்பங்களும் அடங்கும்.

## 7. தொழில் இழப்பு

அவர் வேலை செய்த நிறுவனத்தின் காணி சுவீகரிப்பினால் சம்பளத்துடனான வேலையை இழந்த ஒருவருக்கு ரூபா 15,000 அல்லது 3 மாத அடிப்படைச் சம்பளம் எது கூடவோ அது வழங்கப்படும். (காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு முன் 6 மாதம் தொழில் செய்த அத்தாட்சி காண்பிக்கப்பட வேண்டும்)

## 8. கால வரையறைக்கு முன்னதாக ஆதனங்களை கையளிப்பவருக்கான மேலதிக விருப்புக் கொடுப்பனவு

8.1 பாதிக்கப்பட்ட நபர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் குறிக்கப்பட்ட திகதிக்கு முன் ஆதனங்களை கையளிப்பாரானால் பின் கூறப்படும் காசு கொடுப்பனவுக்கு அவர் உரித்துடையவராவார்.

| | |
|---|---|
| கட்டிடங்கள்/வீடுகள் | சட்ட ரீதியான கொடுப்பனவில் 25% (பிரிவு 17) இது ஆகக் குறைந்தது ரூபா 25,000 ஆகவும் ஆகக் கூடியது ரூபா 50,000 ஆகவும் இருக்கும். |
| பண்படுத்தப்பட்ட விவசாயக் காணி | சட்ட ரீதியான கொடுப்பனவில் 5% (பிரிவு 17) இது ஆகக் குறைந்தது 10,000 ஆகவும் ஆகக் கூடியது ரூபா 100,000 ஆகவும் இருக்கும். |

### 8.2 தற்காலிக வதிவிடம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் குறிப்பிட்ட திகதிக்கு ஆதனத்தைப் பொறுப்பேற்கும் தேவை ஏற்பட்டால் குறிப்பிட்ட வீட்டின் நில அளவு அடிப்படையில் வாடகைபடி வழங்கப்படும்.

| வீட்டு வகை | மாநகர சபை பகுதி ரூபா | பட்டிண சபை பகுதி ரூபா | பிரதேச சபை பகுதி ரூபா |
|---|---|---|---|
| 500 சதுர அடிக்கு குறைவானது | 50,000.00 | 40,000.00 | 20,000.00 |
| 500–750 சதுர அடி | 60,000.00 | 50,000.00 | 30,000.00 |
| 750–1000 சதுர அடி | 75,000.00 | 60,000.00 | 40,000.00 |
| 1000 சதுர அடிக்கு கூடியது | 100,000.00 | 75,000.00 | 50,000.00 |

### 8.3 பொருட்களை அகற்றுவதற்கான கொடுப்பனவு

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் குறிப்பிட்ட திகதியில் ஆவணம் பொறுப்பேற்கப்படும் தேவை ஏற்படின் வீட்டின் நில அளவு அடிப்படையில் பொருட்களை கொண்டு செல்லும் கொடுப்பனவு பின்வருமாறு அமையும்.

| வீட்டு வகை | கொடுப்பனவுத் தொகை |
|---|---|
| 500 சதுர அடிக்கு குறைவானது | 5,000.00 |
| 500 – 750 சதுர அடி | 7,500.00 |
| 750 – 1000 சதுர அடி | 10,000.00 |
| 1000 சதுர அடிக்கு கூடியது | 15,000.00 |

## 9. ஏனைய பயன்கள்

9.1 தங்களின் ஆதனங்களை உரிமையுடனான ஒவ்வொரு மீளக்குடியிருப்போரும் ஒரு மீளக்குடியிருக்கும் பகுதியில் 20 பேர்ச் வரையிலான காணித் துண்டுக்கு உரித்துடையவராவர். இதற்குரிய கொடுப்பனவு திருத்தப்படாத பெறுமதி அல்லது சுய மீள்குடியேற்றத்திற்கான காசு நன்கொடை.

9.2 அத்துமீறிக் குடியிருப்பாளர்களுக்கு மீளக்குடியிருக்கும் பகுதியில் 10 பேர்ச் காணித் துண்டு இலவசமாக அல்லது சுய மீள்குடியிருப்புக்கான காசு கொடுப்பனவு.

9.3 ஒரே வீட்டில் குடியிருந்து வாக்காளர் பட்டியலில் தனியாகவோ வேறாகவோ காணி சுவீகரிப்பு சட்டம் பிரிவு 2 இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு முன் 3 வருடங்களுக்கு இருந்தால் அவர்களுக்கு இலவசமாக 10 பேர்ச் காணித் துண்டு வழங்கப்படும். அல்லது சுய மீள்குடியேற்றக்காரர்களுக்குப் பொருத்தமான காசுக் கொடுப்பனவில் 50% ஆகக் குறைந்தது 100,000 ரூபா.

(மேற்கூறியவற்றுக்கான காணிகளின் குறிப்பிடப்பட்ட பகுதியில் இருக்கும் காணிகளின் அளவைப் பொறுத்ததாகும்).

## 10. <u>சுய மீள்குடியேற்றம்</u>

தற்போதைய ஆதனம் அமைந்துள்ள பகுதியைப் பொறுத்து சுய மீள்குடியேற விரும்புபவர்கள் ஒரு காணித் துண்டுக்குப் பதிலாக பின்வரும் ஆகக் கூடிய தொகைக்கு உரித்துடையவராவர். 9.3 இல் கூறப்பட்ட உப குடும்பங்களுக்கு இக் காசு கொடுப்பனவில் 50% காணித் துண்டுக்குப் பதிலாக வழங்கப்படும். இத்தொகை ஆகக் குறைந்தது ரூபா 100,000 ஆகும்.

| | | |
|---|---|---|
| 10.1 | மாநகரப் பகுதி | ரூபா 500,000.00 |
| 10.2 | பட்டணப் பகுதியும் கொழும்பு பெரும்பாக பகுதியுள் அடங்கிய பிரதேச சபைகளும் | ரூபா 300,000.00 |
| 10.3 | ஏனைய பிரதேச சபை பகுதி | ரூபா 150,000.00 |

**11.** எல்லா மேலதிக விருப்புக் கொடுப்பனவுகளும் பிரதம மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்படும். மேலதிக விருப்புக் கொடுப்பனவுகளுக்கு வட்டிகள் வழங்கப்படமாட்டா. காணி சுவீகரிப்பு மீளாய்வுக் குழு (LARC) கொடுப்பனவுத் தொகை சம்பந்தமான விடயங்கள் தவிர்ந்த ஏனைய நிர்வாக விடயங்களிலும் மற்றும் சுவீ கரிப்பினால் ஏற்படும் பிணக்குள் சம்பந்தமாக தீர்மானங்கள் மேற்கொள்ளும்.

## 12. உருத்துப் பெறும் பாதிக்கப்பட்ட மக்கள்

இந்தத் தொகுதி 03.10.2001 அமைச்சர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு (அமைச்சர் சபை விஞ்ஞாபன இல. 01/1778/017/002) தற்பொழுது நடைமுறையில் உள்ள திட்டங்கள் சம்பந்தமான கொடுப்பனவுக்குப் பொருந்தாது. இந்தத் திட்டம் அமுல்படுத்துவதற்கு முன்னர் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கும் இந்தத் தொகுதி பொருந்தாது.